# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2460/02- 2025 ඔක්තෝබර් මස 27 වැනි සඳුදා - 2025.10.27

2460/02 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

மதுவரி அறிவித்தல் இலக்கம் 2/2025

மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் பரிந்துரைக்கப்பட்டு 2025 ஒற்றோபர் 22 ஆந் திகதி பாராளுமன்றத்தின் தீர்மானத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட விதிகள்.

இந்த விதிகள் 2025 ஒற்றோபர் 28 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.
கொழும்பு 01,
2025 ஒற்றோபர் 27.

**மதுபான உற்பத்திக்கான வரி செலுத்துதல் மற்றும் கட்டண அறவீட்டிற்கான காலப்பகுதி தொடர்பான விதிகள்**

1. ஒவ்வொரு உரிமதாரரும், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) பிரிவு 22 இன் கீழ், அவ்வப்போது தீர்மானிக்கப்பட்டு, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விகிதங்களில், அத்தகைய உரிமதாரரால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு லீற்றர் மதுபானத்திற்கும், உரிய திகதியில் அல்லது அதற்கு முன் தீர்வையைச் செலுத்த வேண்டும்.

2. அத்தகைய தீர்வையைச் செலுத்த வேண்டிய இறுதித் திகதி:

(அ) மாதத்தின் முதல் பதினைந்து (15) நாட்களின் உற்பத்தியைப் பொறுத்தவரை அந்த மாதத்தின் கடைசிநாள்; மற்றும்

(ஆ) குறிப்பிட்ட மாதத்தின் பதினாறாவது (16 ஆவது) நாளிலிருந்து கடைசி நாள் வரையிலான காலகட்டத்தின் உற்பத்தியைப் பொறுத்தவரை, அடுத்த மாதத்தின் பதினைந்தாம் (15 ஆவது) நாள்.

3. உரிமதாரர் உரிய திகதிக்குள் தீர்வையைச் செலுத்தத் தவறினால், அத்தகைய உரிமதாரர், செலுத்த வேண்டிய தீர்வையுடன் கூடுதலாக, மாதத்திற்கு மூன்று சதவீதம் (3%) என்ற விகிதத்தில் ஒரு கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும். இது அத்தகைய செலுத்த வேண்டிய தீர்வையின் மீது எளிய விகிதத்திற்கமைய கணக்கிடப்படும்.

4. உரிமதாரர், உரிய திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் செலுத்த வேண்டிய தீர்வை மற்றும் கட்டணத்தை முழுமையாகச் செலுத்தத் தவறினால் போத்தலில் அடைக்கும் உரிமம் (மது வரி B1) இடைநிறுத்தப்படும்.

5. உரிய திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களுக்கு மேல் தீர்வை மற்றும் கட்டணம் முழுமையாக செலுத்தப்படாமல் இருந்தால் அத்தகைய உரிமதாரரின் அனைத்து உரிமங்களும் இடைநிறுத்தப்படும்.

6. இந்த விதிகள் அமுலுக்கு வரும் திகதிக்கு முன்னதாக தீர்வையைச் செலுத்துவதற்கான காலக்கெடு வந்தால் விதிகள் 4 மற்றும் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள முப்பது (30) மற்றும் தொண்ணூறு (90) நாட் காலங்கள் முறையே இந்த விதிகள் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து கணக்கிடப்படும்.

7. 2014 சனவரி 20 ஆந் திகதிய 1846/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 962 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இந்த விதிகள் நடைமுறைக்கு வருவதுடன் இரத்துச் செய்யப்படும்.

EOG 10-0262

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது